**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 26.10.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

2026ஆம் ஆண்டு இந்தியா மற்றும் ஆசியானின் கடல்சார் ஒத்துழைப்பு நூற்றாண்டு என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும், அதிக மரங்களை நடுவதுடன், தாயின் பெயரில் ஒரு மரம் நடும் இயக்கத்தை, அனைவரும் வலுப்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகி உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை புயலாக மாற வாய்ப்புகள் உள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுவை பகுதி ஏனாமில், மோன்தா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாளை முதல் வரும் புதன் கிழமை வரை, பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*பிரதமர்-ஆசியான்* (11)

வரும் 2026ஆம் ஆண்டு இந்தியா மற்றும் ஆசியானின் கடல்சார் ஒத்துழைப்பு நூற்றாண்டு என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மலேசியா தலைநகர் கோலாம்பூரில் நடைபெற்று வரும்

ஆசியான்-இந்தியா உச்சி மாநாட்டில் மெய்நிகர் முறையில் உரையாற்றிய அவர், இந்தியாவும், ஆசியானும், சேர்ந்து உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட கால் பங்கு உள்ளதாக, அவர் தெரிவித்தார். இந்தியாவும், ஆசியானும், புவியியல் ரீதியாக பகிர்ந்து கொள்ளவில்லை என்றாலும், ஆழமான வரலாற்று உறவுகள் மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளின் நூலால் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்தியா-ஆசியானின் கடல் பாதுகாப்பு, மற்றும் நீலப் பொருளாதாரத்தில் ஒத்துழைப்பு வேகமாக வளர்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

--------------------------

*மன் கீ பாத்* 1 (15)

நாடு முழுவதும், அதிக மரங்களை நடுவதுடன், தாயின் பெயரில் ஒரு மரம் நடும் இயக்கத்தை, அனைவரும் வலுப்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். அவர் இன்று காலை அகில இந்திய வானொலியில், 127ஆவது மனதின் குரல் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடையே உரையாற்றினார். நாடு முழுவதும் தீபாவளி பண்டிகையை கொண்டாடிய வேலையில் தற்போது, சத் பூஜை கொண்டாட்டங்களில் மக்கள் ஈடுபட்டு இருப்பதாக அவர் கூறினார். ஒரு காலத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் கூட, இந்த முறை மகிழ்ச்சி தீபங்கள் ஏற்றப்பட்டதாக, பிரதமர் தெரிவித்தார். ஜிஎஸ்டி சேமிப்பு கொண்டாட்டத்தால், மக்களிடையே

உற்சாகம் காணப்பட்டதாகவும், இந்த ஆண்டு பண்டிகையின் போது, உள்நாட்டு பொருட்களை வாங்குவது அதிகரித்து இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். தூய்மை இந்தியா இயக்கத்தின் முன்னேற்றமாக, பிளாஸ்டிக் குப்பைகளை அகற்றும் வித்தியாசமான முயற்சியை பிரதமர் தமது



உரையில் குறிப்பிட்டார். அம்பிகாபூரில் உள்ள ஒரு தனியார் உணவுக் கூடத்தில், பிளாஸ்டிக் குப்பையை கொண்டு வருபவர்களுக்கு காலை உணவு, பகல் உணவு வழங்கப்படுவதை பிரதமர் சுட்டிக் காட்டினார். இதேப்போல் பெங்களூரைச் சேர்ந்த பொறியாளர் கபில் ஷர்மாவை பற்றியும் அவர் தமது உரையில் குறிப்பிட்டார். திரு. கபில் ஷர்மாவின் முயற்சியால்,பெங்களூரு மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் 40 கிணறுகள், மற்றும் 6 ஏரிகள் புத்துயிர் பெற்றுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார். தாயின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கத்தை அதிகம் முன்னெடுத்து செல்ல வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வரும் 31ஆம் தேதி நாட்டின் இரும்பு மனிதர் என போற்றப்படும் சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினம் ஒற்றுமை தினமாக கொண்டாடப்படுவதை அவர் சுட்டிக் காட்டினார். குஜராத்தின் ஒற்றுமை நகரில் அமைந்துள்ள சர்தார் வல்லபாய் பட்டேலின் சிலைக்கு அருகில் இன்றைய இந்தியாவின் வல்லமையை வெளிப்படுத்தும் வகையில்

அணிவகுப்பு நடைபெற உள்ளதாகவும், அவர் தெரிவித்தார். இந்த தேசிய ஒற்றுமை தின கொண்டாட்டத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்பதுடன், இளைஞர்களின் விழிப்புணர்வுக்காக, அன்றைய தினம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒற்றுமை ஓட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். நாடு முழுவதும் நடைபெறும்

*மன் கீ பாத்* 3 (16)

இந்நிகழ்ச்சியில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஒடிசா மாநிலம் கோராபுட் காபியின் சுவை குறித்து, ஏராளமானோர் கருத்துக்களை பகிர்ந்து கொண்டு இருப்பதாக பிரதமர் தெரிவித்தார் கோராபுட் காபியின் சுவை அலாதியானது மட்டுமல்ல என்றும், அதனை சாகுபடி செய்யும் மக்களுக்கு, ஆதாயம் அளித்து வருவதாகவும், அவர் கூறினார். பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிவோர் தங்கள் வேலையை விட்டு விட்டு, தற்போது, காபி சாகுபடியின் மீதான ஆர்வத்தில் இத்துறையில் இறங்கி இருப்பதாகவும், அவர் தெரிவித்தார். காபி சாகுபடி மூலம் அவர்களுக்கு மரியாதை, வலிமை இரண்டும் கிடைப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்திய காபி, உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருவதை பற்றி பிரதமர் பெருமிதம் தெரிவித்தார். கர்நாடகாவின் சிக்மகளூர், கூர்க், மற்றும் ஹாசன், தமிழ்நாட்டின் நீலகிரி, மற்றும் கொடைக்கானல் உள்ளிட்ட இடங்களில் காபி சாகுபடி செய்யப்பட்டு வருவதாக பிரதமர் தமது உரையில் தெரிவித்தார். இதனால

இந்தியாவின் காபி அடையாளம் உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

*மன் கீ பாத்* 4 (11)

இந்தியாவின் தேசிய பாடலான வந்தே மாதரம் குறித்து பேசிய பிரதமர், இந்த பாடல் பாரத அன்னையின் தாய்மை உணர்வையும், நாம் அனைவரும் பிள்ளைகள் என்ற வகையில் நமது பொறுப்புக்களை தூண்டுவதாகவும் அவர் தெரிவித்தார். வந்தே மாதரம் என்ற முழக்கம் 140 கோடி இந்திய மக்களிடையே ஒற்றுமை சக்தியை தூண்டுவதாக அவர் தெரிவித்தார். பங்கிம்சந்திர சட்டோபாத்யாய் என்பவரால் இயற்றப்பட்ட வந்தே மாதரம் பாடலின் உணர்வு, என்றென்றும் அழியா விழிப்புணர்வுடன் இன்றும் தொடர்வதாக பிரதமர் குறப்பிட்டார். அடுத்த மாதம் 7ஆம் தேதி இப்பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டை நாம் கொண்டாட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். வந்தே மாதரம் தொடர்பான கருத்துக்களை தமக்கு அனுப்ப வேண்டும் என்றும், அவர் கேட்டுக் கொண்டார்.

---------------------------

*முர்மு (8)*

ஆரோக்கியமான, மற்றும், வளர்ந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு, தனியார் துறை, சுகாதார நிறுவனங்கள், தங்களது விலை மதிப்பற்ற பங்கினை வழங்க முடியும் என்று, குடியரசுத் தலைவர் திருமதி

திரௌபதி முர்மு, தெரிவித்துள்ளார். உத்தரபிரதேச மாநிலம் காசியாபாத்தில் உள்ள இந்திராபுரத்தில், யசோதா மருத்துவ மையத்தை இன்று திறந்து வைத்து பேசிய அவர், சுகாதாரம், தேசக் கட்டமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதால், நாடு முழுவதும் சுகாதாரம், மற்றும், மருத்துவ உள்கட்டமைப்பு நிறுவனங்கள், தொடர்ந்து விரிவுப்படுத்தப்பட்டு வருவதாக, அவர் தெரிவித்தார்.

--------------------------

ஜிஎஸ்டி-உத்தரபிரதேசம் (5)

பிரதமர் திரு நரேந்திர மோடியால் அறிவிக்கப்பட்டு கடந்த மாதம் 22-ஆம் தேதி அமலாகும் ஜிஎஸ்டி சேமிப்பு உற்சவம், சமூகத்தின் அனைத்து பிரிவு மக்களுக்கும் பயன் அளித்து வருகிறது. அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், உத்தரபிரதேசத்தில் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

**(வாய்ஸ்)**

ஜிஎஸ்டி-உத்தரபிரதேசம் 2 (14)

**(வாய்ஸ்)**

உத்தரபிரதேச மாநிலத்தில், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி வரி சீர்திருத்ததால், விவசாயிகள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள், உள்ளூர் தொழிலாளர்கள்,பொம்மை விற்பனையாளர்கள், பெரிதும் பயனடைவர்.

இப்பொருட்கள் மீதான ஜிஎஸ்டி வரி, 12 சதவிகிதத்தில் இருநது 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதால், மாநிலத்தில் கைவினைஞர், மற்றும், பொம்மை உற்பத்தியாளர்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். இதனால் இந்த பொருட்கள் மிகவும் மலிவுவிலையில் விற்கப்படுகின்றன. இதேப்போல், கான்பூர் மற்றும் ஆக்ராவின் தோல் தொழில்களும் பெரிய அளவில் பயனடைந்துள்ளன. இப்பகுதிகளில், 2 ஆயிரத்து 500 ரூபாய் வரை விலை கொண்ட தோல் பொருட்கள்,தற்போது, 5 சதவிகிதம் ஜிஎஸ்டி வரியை கொண்டுள்ளன. இப்பகுதியில் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தத்தால் உத்தரபிரதேச மாநிலத்தின் பொருளாதாரம் புத்துயிர் பெற்றுள்ளது.

---------------------------

*வானிலை 1* (20)

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகி உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை புயலாக மாற வாய்ப்புகள் உள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த புயல், மேற்கு-தென்மேற்கு திசையில் நகர்ந்து வருவதால், முன்கூட்டியே இன்று மாலை புயலாக வலுப்பெறும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக ஆந்திரா, தமிழகம், புதுச்சேரியில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மோந்தா என பெயரிடப்பட்டுள்ள இந்த புயல், நாளை முதல் வரும் புதன் கிழமை வரை பலத்த காற்றுடன் கனமழை பெய்யும் என்பதால், ஆந்திர மாநிலம் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளது. இது தொடர்பாக உள்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் இன்று அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.

புதுவை பகுதி ஏனாமில், வரும் செவ்வாய் கிழமை மாலை அல்லது இரவுக்குள் காக்கிநாடா அருகே புயல் கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்த புயல் கரையை கடக்கும் போது, மணிக்கு 90 முதல், 100 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்றும், இப்பகுதியில் கனமழை முதல் மிக கனமழை வரை பெற்ற வாய்ப்பு உள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. ஏனாமில், நிலவும் மோசமான வானிலையை கருத்தில் கொண்டு, அடுத்த 3 நாட்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளதாக,

*வானிலை* 2 (14)

ஏனாம் பகுதி மண்டல நிர்வாகி திரு. அன்கிட் குமார் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, கட்டுப்பாட்டு அறை மண்டல நிர்வாகி அலுவலகத்தில் திறக்கப் பட்டுள்ளதாகவும், பொது மக்கள் அவசரகால தேவைக்கு 0884-2321-223 , 2323-200 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நிவாரணம்

மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட, தேசிய பேரிடர் மீட்புப் படையின் ஒரு குழு இன்று ஏனாம் செல்ல உள்ளது. அரசுப் பள்ளிகள் புயல் நிவாரண மையங்களாக செயல்படும் என்றும், மறு உத்தரவு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும், கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள், மற்றும், பலவீனமான வீடுகளில் வசிப்போர், அருகில் உள்ள நிவாரண முகாம்களுக்கு செல்ல வேண்டும் என்றும், அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து ஏனாம் பகுதி மண்டல நிர்வாகி திரு. அன்கிட் குமார் மேலும் கூறுகையில்.....

**(வாய்ஸ்)**

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

2026ஆம் ஆண்டு இந்தியா மற்றும் ஆசியானின் கடல்சார் ஒத்துழைப்பு நூற்றாண்டு என பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும், அதிக மரங்களை நடுவதுடன், தாயின் பெயரில் ஒரு மரம் நடும் இயக்கத்தை, அனைவரும் வலுப்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகி உள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை புயலாக மாற வாய்ப்புகள் உள்ளதாக, இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புதுவை பகுதி ஏனாமில், மோன்தா புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாளை முதல் வரும் புதன் கிழமை வரை, பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப் பட்டுள்ளது.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**